**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 513/2023

**வா.சா.1**

**திரு. குப்புசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

பிரதிவாதி எனது தகப்பனார். என் தகப்பனாருக்கு 2 மனைவிகள். நானும், என் சகோதரி மகேஸ்வரியும் என் தகப்பனாரின் முதல் மனைவி மக்கள் என்றால் சரிதான். 2 வது மனைவிக்கு ஒரு மகன் உள்ளார். அவர் உடல் ஊனமுற்றவர் என்றால் சரிதான். என் தாயாரும், தகப்பனாரும் கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரிந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் சகோதரி என் தாயாருடன் இருந்துகொண்டார். நான் என் தகப்பனாருடன் வந்துவிட்டேன் எனவே என்னை என் தகப்பனாரும், என் தகப்பனாரின் இளைய மனைவியும் பராமரித்துவந்தார்கள் என்றால்சரிதான். எனக்கு என் தகப்பனார் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். நான் என் மனைவியுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் கடந்த 10 ஆண்டுகளாக அவ்வாறு வாழவில்லை. எனக்கு ஒரு மகள் உள்ளார். என் மகளும் அவரது தாயாருடன் உள்ளார் என்றால் சரிதான். நான் என் மனைவிக்கும், என் மகளுக்கும் ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகளுக்கு

வயது 17. அவர் தற்போது 12 ம் வகுப்பு முடித்துவிட்டு கல்லூரிக்கு செல்ல உள்ளார். என் மனைவிக்கு வாய் பேச இயலாது, காதும் கேட்காது என்றால் சரிதான். 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே என் மனைவியையும், என் மகளையும் என் மனைவியின் பெற்றோர்கள் தான் கவனித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு அன்றாட செலவுக்கு நான் பணம் கொடுக்கிறேனா என்றால் கொடுத்துக்கொண்டு தான் உள்ளேன். நானும், என் அப்பாவும் எத்தனை ஆண்டுகளாக பிரிந்து இருக்கிறோம் என்றால் கடந்த 2 ஆண்டுகளாகத்தான் அவ்வாறு பிரிந்து உள்ளோம். நான் கஸ்தூ நகர் ராஜன் நகரில் குடியிருக்கிறேன். நான் பகுத்தம்பாளையத்தில் குடியிருப்பதில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் 2012 ம் ஆண்டிலேயே தாளவாடி சென்றுவிட்டார் என்றால் சரிதான். அங்கு தோட்டம் வாங்கி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்களை என் தாத்தா எனக்கு உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. பூர்வீக சொத்துக்கள் எதுவுமில்லை அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் இல்லை அப்படியே உள்ளது. என் தகப்பனாருக்கு குடும்ப செலவு என்று பெரிய அளவில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து என் தகப்பனார் தான் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாளவாடியில் உள்ள சொத்தும் என் தகப்பனார் தான் வாங்கினார் என்றால் சரிதான். வயல் எவ்வளவு ஏக்கர் என்றால் 4.77 ஏக்கர். அதன் காலை எண் தெரியுமா என்றால் தெரியாது வீட்டில் எழுதி வைத்துள்ளேன். ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரண பூமி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் இரண்டு சர்வே எண்கள் உள்ளது ஒரு சர்வே எண்ணில் 3 1/2 ஏக்கர், மற்றொரு சர்வே எண்ணில் 1.30 ஏக்கர். எனக்கு என்ன ஆண்டு வருமானம்

என்றால் ரூ.3 லட்சம் வரும். எனக்கு வருடத்திற்கு எவ்வளவு செலவாகும் என்றால் ரூ.1 லட்சம் ஆகும். ஒப்பந்த சமயத்தில் தொகை வங்கியில் வைத்திருந்தேனா என்றால் இல்லை. ஒப்பந்தத்தில் கண்டுள்ள தொகை எப்படி வந்தது என்றால் நான் பல சீட்டுகள் போட்டிருந்தேன் PF பணமும் எடுத்தேன். அதை கொஞ்ச கொஞ்சமாக எடுத்துக்கொடுத்தேன். என் தகப்பனாருக்கு கொஞ்ச கொஞ்சமாக தொகை கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். எந்த ஆண்டு PF பணம் எடுத்ததாக சொல்கிறேன் என்றால் இன்றிலிருந்து ஒரு ஆண்டு ஆகிறது. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு என்ன வருமானம் வருகிறது என்றால் காகித மில்லில் வேலை செய்து வருகிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.21 ஆயிரம். பிடித்தம் ரூ. 1200/-. என் தகப்பனார் பூமியை விற்க ஏற்பாடு செய்து வருகிறார் என்று யார் எனக்கு சொன்னது என்றால் யாரும் சொல்லவில்லை. என் தகப்பனாருக்கு பூமியை விற்பனை செய்ய வகையில் அவசியம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தத்திற்கு முன்பாக நான் பலமுறை என் தகப்பனாரிடம் சொத்தை கேட்டும், அவர் கொடுக்க முன்வரவில்லை என்றால் சரிதான். எதனால் சொத்தை கொடுக்க முன்வரவில்லை என்றால் அதை பற்றி தெரியவில்லை. எனக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. நான் தினமும் மது அருந்திவிட்டு வந்து தகராறு செய்ததால் தான் என் மனைவி என்னுடன் வாழாமல் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் எவ்வளவு தொகை கொண்ட பேப்பரில் எழுதப்பபட்டது என்றால் 20 ரூபாய். எங்கு வைத்து பத்திரம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சத்தியமங்கலம் பத்திர பதிவு அலுவலகத்திற்கு அருகேயுள்ள அலுவலகத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார்.

பத்திரம் தயாரித்தவர் யார் என்றால் குமார் அவர்தான் டைப் செய்தார். அவர் கையெழுத்து செய்தாரா என்றால் ஆமாம். பத்திரம் தயாரிக்க யார் வாசகங்கள் சொன்னது என்றால் நானும், ஜெயராமும் சொன்னோம். நானும், ஜெயராமும் தயார் செய்த ஆவணத்தில் தான் என் தகப்பனார் கையெழுத்து போட்டார் என்றால் ஆமாம் அவரும் பார்த்துவிட்டு தான் கையெழுத்து போட்டார். என் தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் படிக்கவில்லை. ஜெயராமன் எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் சிறுவயதிலிருந்தே பழக்கம். நாங்கள் அனைவரும் ஒரே பேனாவில் கையெழுத்து போட்டோமா என்றால் குமார் பத்திர எழுத்தரின் பேனாவில்தான் அனைவரும் கையெழுத்து போட்டோம். ஒப்பந்த தேதியில் என் தகப்பனாருக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் தாளவாடிக்கு செல்வதற்கு முன்பே பணம் கொடுத்துவிட்டேன். நானும், ஜெயராமும் தாளவாடிக்கு சென்று என் தகப்பனாரிடம் சொத்தை எழுதி வைக்க கேட்டோம் என்றால் இல்லை ஒருமுறை தோட்டத்திற்கு சென்றோம். மேற்படி தாளவாடியில் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. சாட்சிகளை யார் அழைத்துசென்றார்கள் என்றால் நான்தான் அழைத்துசென்றேன். யார் யார் சாட்சிகள் என்றால் ஜெயராமன், கன்னுபையன் ஆகியோர். கன்னுபையன் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு பழக்கமானவர்தான். நான் ஏற்கனவே தாவா சொத்தை கிரையம் எழுதிகொடுக்கவேண்டி என் தகப்பனாருக்கு அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு என் தகப்பனார் ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று மறுத்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில்

ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், நானும், ஜெயராமனும் சேர்ந்து மோசடியாக உருவாக்கிக்கொண்டோம் என்று சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். என் தகப்பனார் அனுப்பிய பதில் அறிவிப்பையும், தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையும் படித்து பார்த்தேனா என்றால் தற்போதுதான் படித்து பார்த்தேன். ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று மறுத்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொல்லும் குமார் என்பவரை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். சாட்சி தற்போது மேற்படி பத்திர எழுத்தர் குமாரின் மனைவி தான் என் தகப்பனாரிடம் கையெழுத்து பெற்றார் என்று கூறுகிறார். என் தகப்பனார் ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று மறுத்துள்ள நிலையில் நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாக்கி தொகை ரூ.50 ஆயிரத்தை இன்றைய நாள்வரை நீதிமன்றத்தில் செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 என் தகப்பனார் கொடுத்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 க்கு 9 மாதங்கள் கழித்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 9 மாத காலதாமதத்திற்கு காரணம் சொல்லவில்லை என்றால் என் அப்பா எழுதிக்கொடுத்த அசல் கிரைய ஒப்பந்தம் தொலைந்துபோய்விட்டது அதனால் எஸ்.பி-யிடம் புகார் கொடுத்தேன். அதனால் மறுபடியும் என் தகப்பனாரும், கன்னுபையனும் மேற்படி பத்திர எழுத்தர் குமார் கடையில்வைத்து திருப்பி என்னிடம் ஒப்பந்தத்தை கொடுத்தார். நான் கொடுத்ததாக கூறும் புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என் தகப்பனார் குமார் கடையில் வந்து

ஒப்பந்தத்தை என்னிடம் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பவானிசாகர் காவல்நிலையத்தில் எங்களை விசாரித்தார்களா என்றால் ஆமாம். பவானிசாகர் காவல்நிலையத்திற்கும், தாவாசொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். பவானிசாகருக்கும், சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தில் என் தகப்பனார் எழுதிக்கொடுத்த அசல் ஒப்பந்தம் தொலைந்துபோய்விட்டது அதனால் என் அப்பாவை புதியதாக ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க சொல்லி தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என் தகப்பனார் காவல்நிலையத்தில் ஆஜராகி ஒப்பந்தம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், நான் பொய் பேசுவதாக சொன்னார் என்றால் இல்லை.

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.